## ஹஜ்ரத் த்ஜு ல் கி:.ப்ல் (அ)

*அல்லாஹ் தஆலா ஹஜ்ரத் துல் கிஃப்ல் (அ) அவர்களைப்பற்றித் திருக்ஃகுர் ஆனில் இரண்டு முறை மட்டுமே குறிப்பிட்டுள்ளான்:*

وَإِسۡمَٰعِيلَ وَإِدۡرِيسَ وَذَا ٱلۡكِفۡلِۖ كُلّٞ مِّنَ ٱلصَّٰبِرِينَ ۝٨٥ وَأَدۡخَلۡنَٰهُمۡ فِي رَحۡمَتِنَآۖ إِنَّهُم مِّنَ ٱلصَّٰلِحِينَ ۝٨٦

*பொருள்: மேலும், இதே அருட்பேற்றினை இஸ்மாயீலுக்கும் இத்ரீசுக்கும் துல்கிஃப்லுக்கும் நாம் வழங்கியிருந்தோம். இவர்கள் அனைவரும் பொறு மையைக் கடைபிடிப்பவர்களாக இருந்தார்கள். மேலும், நாம் அவர்களை நம்முடைய அருளில் நுழைவித்தோம். ஏனெனில், அவர்கள் அனைவரும் நல்லடியார்களாகவே திகழ்ந்தார்கள் (அல் அன்பியா:85,86)*

*ஹஜ்ரத் இப்ராஹீம் (அ), மற்றும் ஹஜ்ரத் இஸ்ஹாஃக் (அ) மற்றும் ஹஜ்ரத் யாஃகூப் (அ) அவர்களைப்பற்றிப் பாராட்டிக்கூறியபின் இவ்வாறு குறிப்பிடு கின்றான்:*

وَٱذۡكُرۡ إِسۡمَٰعِيلَ وَٱلۡيَسَعَ وَذَا ٱلۡكِفۡلِۖ وَكُلّٞ مِّنَ ٱلۡأَخۡيَارِ ۝٤٨

*பொருள்: இஸ்மாயீல், அல் யசஃஉ மற்றும் துல்கிஃப்லு அகியோரையும் நினைவு கூர்வீராக, இவர்கள் அனைவரும் நன்மக்களாய் விளங்கினர் (ஸாத்:48)*

*இந்த இரண்டு இடங்களைத்தவிர திருக்ஃகுர்அனில் அவர்களைப்பற்றி எங் குமே குறிப்பிடப்படவில்லை. துல் கிஃப்ல் (அ) என்பது அவருடைய பண்புப் பெயராகும், அவருடைய உண்மையான பெயர் எங்குமே குறிப்பிடப்பட வில்லை. அல்லாஹ் தஆலா அவர்களைப் பொறுமையைக் கடைபிடிப்பவர் களுடன் குறிப்பிட்டுள்ளான். இதிலிருந்து, அவர்கள் எண்ணற்றத் துன்பங்க ளையும் இன்னல்களையும் எதிர்கொள்ளவேண்டியிருந்தது என்றும் , அவர்கள் அவற்றையெல்லாம் மனதார எதிர்கொண்டு பொறுமையைக் கடைபிடித்தார் என்பதும் அவ்விஷயத்தில் நிகரற்ற மனஉறுதியினையும் வெளிப்படுத்தி ய்ள்ளார் என்பதையும் அறியமுடிகிறது. அல்லாஹ் தஆலா அவர்களைப் பொறுமையாளர் என்ற பண்பினைத் தந்துள்ளதோடு அவர்களைப் பாராட்*

டும் வகையில் அவர் நாம் கருணை காட்டுவதற்குத் தகுதிவாய்ந்தவர் மற்றும் நேர்மையானவர்களுள் ஒருவராகவும் இருந்தார் என்றும் கூறியுள்ளான். இவ்வாறே மற்றொரு வசனத்திலும் அவர்களுடைய பெயர் நபிமார்களின் பெயர்களுடன் குறிபிட்ப்பட்டுள்ளதோடு அவர் எம்முடைய பியரியமான அடியார்களில் ஒருவராக இருந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு திருக்ஃகுர்ஆன் விளக்கவுரைகளில் இவர்களைப்பற்றி பல்வேறு நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ன. சில விரிவுரைகளில் அவர்களை ஒரு நபியாக அங்கிகரிக்கப்படவில்லை. மாறாக, ஒரு ஸாலிஹான நேர்மையான மனிதர் என்று கருதுகின்றனர். இந்த விவரங்களின் பின்னணியில் அறியப்படுவது யாதெனில், அல்லாஹ் அனுப்பிய நபிமார்களில் ஒருவர் தன்னுடைய இறுதி நாட்களில் மக்களிடம் கேட்டார்கள், எனக்குப்பிறகு என்னுடைய இடத்தில் செயல்படுபவர் யாராக இருப்பார்? அதன்பின் அவர்களுக்கு மூன்று நிபந்தனைகளை நிர்ணயித்தார்கள். முதலாவது அந்த நாளில் அவர் நோன்பு நேற்பவராக இருப்பார், இரண்டாவது, அவர் இரவில் அல்லாஹ்வை வணங்கிக்கொண்டிருப்பார், மூன்றாவது அவர் எப்போதுமே கோபம் கொள்ள மாட்டார். இதனைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒரு வாலிபர் எழுந்து நின்று கூறினார், நான் இந்த மூன்று நிபதந்தகைளளையும் பூர்த்தி செய்வேன். இறுதியாக, அவர்கள் அவரைத் தன்னுடைய இடத்தில் பொறுப்பேற்று செயல்படுபவராக நியமித்துவிட்டார். ஷைத்தான் இந்த மூன்று நிபந்தனைகளில் எந்த ஒன்றையாவது துல் கிஃப்ல் அவர்கள் முறித்துவிடவேண்டும் என்று எண்ணினான், ஆனால், அவன் தோல்வியையே கண்டான். இதன் காரணமாகவே, அவரை துல் கிஃப் (பொறுப்பேற்பவர்) என்று அழைத்தனர். அல்லாமா மனாஸ்ஜிர் அஹ்சன் கீலானி அவர்கள் துல் கிஃப்ல் என்பவர் கௌதம புத்தராக இருக்கலாம் என்றும் கருத்துக் கூறியுள்ளார்கள். ஏனெனில், கௌதம புத்தர் கபில வஸ்துவில் வாழ்ந்தவர் என்ற வகையில் கபில வஸ்து எனும் சொல் திரிபுற்று கிஃப்ல் என்று கருதப்பட்டு ذو எனும் அரபிச் சொல்லைக்கொண்டு அதன்புறமாகத் தொடர்புபடுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதகிறார். அதாவது கபில வஸ்துக்காரர் (அல்லாஹ்வே உண்மையை அறிபவன்).

* * *